தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் கடல் கப்பற் சரக்குகள், விமானமேற்றப்படும் சரக்குகள் சார்பாக அபாயக் காப்புறுதித் திட்டங்களை உருவாக்கியுள்ளது. அதன் மூலம் கடலிலும் தரையிலும் வானிலும் அல்லது தரையில் அல்லது உள்ளூரில் தனது பயணவழி (அமய அடிப்படையில் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் உட்பட) பண்டங்களுக்கு ஏற்படும் நட்டங்கள் அல்லது அவை அழிவடைதலுக்கு எதிராக

காப்புறுத்தப்பட்டவர் நட்டஈடு வழங்கப்படுவார்.

கடல் அபாய (கப்பல் கட்டுமான) காப்புறுதிப் பத்திரத்தினால், கடற்கலன்கள், குறும் கடற்கலன்கள், துறைமுக மற்றும் ஆற்று ஊர்திகள், சகல விதமான தனிப்பட்ட இன்பச் சுற்றுலாக்ககளும் வணிகப் போக்குவரத்து விமானங்களும் தனியார் கிளைடர் விமானங்கள், உலங்கு வானூர்திகள், தரை உபகரணங்கள், வேறு ஊர்திகளுக்கு காப்புறுதி உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. இது விமானத்திற்கு, விமானத்தின் கட்டுமானத்திற்கு, அதன் இயந்திர உபகரணங்களுக்கு நேரிடும் பௌதிக/நட்ட இழப்புகளுக்கு எதிராக கப்பல் உரிமையாளருக்கு பாதுகாப்பு அளிக்கும் பூரண நட்ட ஆபத்துப் காப்புறுதி உத்தரவாதமொன்றாகும்.



தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தீ காப்புறுதித் திட்டமானது காப்புறுதி செய்யப்பட்ட ஆதனம் தீயினால் அல்லது ஏனைய விசேட நாசங்களினால் இழப்பு அல்லது சேதங்களுக்கு உட்படும் பட்சத்தில் நிதியியல் நட்டஈட்டினை வழங்குகின்றது. எவ்வாறாயினும் ஆதனமானது நிகழ்வுக்கு உடனடியாக முந்திய அவர் குடியிருந்த நிலைக்கு இழப்பின் பின்னர் அதே நிதியியல் நிலையில் நிலைப்படுத்துவதற்கு போதுமானதாகவும் முறையாகவும் காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிறுவனத்தின் தீக் காப்புறுதி பத்திரம் வாழ்விட வீடுகளை காப்பீடு செய்கின்றது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தீக்காப்புறுதி பத்திரத்தின் கீழ் காப்பீடு செய்யப்படும் இடர்கள் தீ மற்றும் வீட்டு கொதிகலன்கள் மற்றும் எரிவாயு கருவிகல அமைப்புகளின் வெடிப்புகள் உள்பட தீ மற்றும் மின் உபத்திரவங்களினால் நேரிடும் நட்ட சேதங்களுக்கு எதிராக காப்புறுதி உத்தரவாதம் அளிக்கின்றது. வெடிப்புகள், வன்மமான சேதம் விளைவித்தல்கள், தாக்க சேதங்கள், விமான சேதங்கள், வெடித்தல்கள், நீர்த்தாங்கி உபகரணங்கள் அல்லது குழாய் மேவுகை போன்றவற்றுடன் வெள்ளப்பெருக்கு, புவி அதிர்வு, எரிமலை வெடிப்பு, சூறாவளி, சண்டமாருதம், கடும் புயல் (டை/பூன்), இடி மின் புயல், டொனாடோ சுழல் காற்று, சுனாமி, கடற்கோள் போன்ற மேலதிக உபத்திரவங்களையும் உள்ளடக்கும் பொருட்டு இது விஸ்தரிக்கப்படலாம். மேலும், அது வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத மற்றும் வன்மமான சேதம் விளைவித்தல்களுக்கு எதிராக உத்தரவாதம் அளிக்குமாறு விஸ்தரிக்கப்படலாம்.

இந்த நானாவித வகுப்பு காப்புறுதித் திட்டங்களின் கீழ் தனிநபர் திடீர் விபத்துக் காப்புறுதி, சத்திர சிகிச்சைகள் மற்றும்

சுகாதாரக் காப்புறுதி, பணக் காப்புறுதி, பயணப்பொதி காப்புறுதி, வீடுகளுக்குக் கன்னமிடல் காப்புறுதி, வேலையாட்கள் நட்டஈட்டுக் காப்புறுதி, வியாபார இடக் காப்புறுதி, மக்கள் பொறுப்புகள் மற்றும் ஏனைய பல்வேறு வகுப்பு காப்புறுதிக்கு எதிராக உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டவற்றுக்கு மேலதிகமாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது பணியாளர் நட்டஈட்டு காப்புறுதியினையும் வழங்குகின்றது. 1934 இன் பணியாளர் நட்டஈட்டு கட்டளைச் சட்டம் மற்றும் அதனை தொடர்ந்து அந்த நியதிகளின் படி தொழில் தருனரொருவர் தொழிலொன்றின் பொருட்டு அல்லது காரணத்தில் தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்ற காயங்கள் மற்றும் தொழில் ரீதியான நோய்கள் தொடர்பில் நட்டஈடு கொடுப்பனவு செய்வதற்கு பொறுப்புடையவராவர். கட்டளைச் சட்டத்திற்கான புதிய திருத்தங்களின் படி சம்பளத்தினை கருத்திற்கொள்ளாது ஊழியர்கள் தற்காலிக, நிரந்தர அல்லது அமைய எவ் அடிப்படையில் இருந்தபோதும் பணியாளர் அனைத்து வகையான ஊதியங்களையும் உள்ளடக்குகின்றது. அதன் விளைவாக அனைத்து ஊழியர் திறத்தவர்கள் மீதான பொறுப்புக்கள் மீது கணிசமான அதிகரிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இதனால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அந்நிதியத்தின் கீழ் பணியாளர் நட்டஈட்டுக் காப்புறுதிக்காக காப்புறுதி செய்த தொழிலாளர்கள் சார்பாக அத்தகைய பொறுப்புக்களை பொறுப்பேற்கின்றது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் வைத்தியசாலை தங்குமிடவசதி, தாதிக் கவனிப்பு, மருந்துகள், அறைக் கட்டணங்கள், சத்திர சிகிச்சை நிபுணர், மயக்க மருத்துவ நிபுணர், மற்றும் வைத்தியர் கட்டணங்கள் மற்றும் விசேட நிபுணர் கட்டணங்கள் மற்றும் விசேடத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன.

தீ அபாயக் காப்புறுதித் திட்டத்திற்கான 2011 ஆம் ஆண்டின் மாதாந்த உரிமைக் கோரிக்கைகள், கட்டுப்பணம், இலாபத்தன்மைப் பகுப்பாய்வு பின்வருமாறு:

<u>வரைபடம் - 5.13: தீ அபாயக் காப்புறுதி இலாபம், கட்டுப்பணம், உரிமைக் கோரிக்கை</u>




கடல் அபாயக் காப்புறுதித் திட்டத்திற்கான 2011 ஆம் ஆண்டின் மாதாந்த உரிமைக் கோரிக்கைகள், கட்டுப்பணம், இலாபத்தன்மைப் பகுப்பாய்வு பின்வருமாறு:

<u>வரைபடம் - 5.14: கடல் அபாயக் காப்புறுதி இலாபம், கட்டுப்பணம், உரிமைக் கோரிக்கை</u>




மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்கான 2011 ஆம் அண்டின் மாதாந்த உரிமை கோரிக்கை, கட்டுப்பணம், இலாபத்தன்மைப் பகுப்பாய்வு பின்வருமாறு:

<u>வரைபடம் - 5.15: மருத்துவக் காப்புறுதி இலாபம், கட்டுப்பணம், உரிமைக் கோரிக்கை</u>




நானாவித காப்புறுதித் திட்டத்திற்கான 2011 ஆம் ஆண்டின் மாதாந்த உரிமைக் கோரிக்கை, கட்டுப்பணம், இலாபத்தன்மை தொடர்பான பகுப்பாய்வு.

<u>வரைபடம் - 5.16: நானாவிதக் காப்புறுதி இலாபம், கட்டுப்பணம், உரிமைக் கோரிக்கை</u>



# வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதி பற்றிய மீளாய்வு



"விதேச றெகியா" என்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு காப்புறுதி திட்டமானது புலம் பெயர்ந்த தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் வடிவமைக்கப்பட்டது.




தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தத்தின் பிரகாரம், 2008 ஜூன் மாதத்தில் இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதித் திட்டம் தாபிக்கப்பட்டது. தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திடமிருந்து காப்புறுதி உத்தரவாதம் பெற்று வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை நாடி இலங்கையிலிருந்து புறப்படும் 18 – 65 வயதுக்கு இடைப்பட்ட இலங்கையர்களுக்கு இதன் மூலம் காப்புறுதி உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது.

அதன்மூலம் பின்வரும் நன்மைகள் கிடைக்கப்பெறுகின்றன.

**நன்மைகள்**

| சம்பவங்கள் | நன்மைகள் |
|---|---|
| வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றதன் பின்னர் கெடுபிடிகள், சுகவீனம் உற்றல், தீடீர் விபத்துக்கு உள்ளாதல், காயத்திற்கு உள்ளாதல், என்பன காரணமாக சொந்த நாட்டிற்கு திரும்பி வருதல் (வெளிநாடு சென்றுள்ளபோது ஒப்பந்தக் காலப்பகுதி முடிவடைந்து 03 மாதத்தின் பின்னரும் இந்த நன்மையைப் பெற்றுக்கொள்வதற்கு புலம்பெயர் ஊழியர்களுக்கு உரிமை உண்டு)<br><br>ஒப்பந்த காலப்பகுதியினுள் பணியாற்றிக்கொண்டிருக்கும் போது அனுசரணையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியமையினால் கர்ப்பமுற்ற நிலையில் தாய்நாட்டிற்கு திரும்பி வருதல். (அனுசரணையாளரிடமிருந்து தப்பிச் சென்றவர்களுக்கு உரிமை கிடையாது) | விமான டிக்கடின் உண்மை பெறுமதி, ரூ. 25,000 மற்றும் இலங்கைக்கு வந்ததன் பின்னர் மேற்கொள்கின்ற மருத்துவக் கட்டணம் |
| ஒப்பந்த காலப்பகுதியினுள் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது அனுசரணையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியமையினால் கர்ப்பமுற்ற நிலையில் தாய்நாட்டிற்கு திரும்பி வருதல். (அனுசரணையாளரிடமிருந்து தப்பிச் சென்றவர்களுக்கு உரிமை கிடையாது) | விமான டிக்கடின் உண்மை பெறுமதி, ரூ. 25,000 மற்றும் இலங்கைக்கு வந்ததன் பின்னர் மேற்கொள்கின்ற மருத்துவக் கட்டணம் |
| வெளிநாட்டில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது யாதேனும் ஒரு விபத்து காரணமாக மரணித்தல். | ரூ. 400,000.00 |

| | |
|---|---|
| ஒப்பந்த காலப்பகுதியினுள் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது ஏற்படுகின்ற திடீர் விபத்தொன்றின் காரணமாக கடும் நோய் வாய்ப்பட்டு இலங்கைக்கு திரும்பி வந்ததன் பின்னர் 03 மாதத்தினுள் மரணமாதல் | ரூ. 200,000.00 மற்றும் விமான டிக்கடின் உண்மை பெறுமதி |
| ஒப்பந்த காலப்பகுதியினுள் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது ஏற்படுகின்ற திடீர் விபத்தொன்றின் காரணமாக பூரண அங்கவீன நிலையை அடைதல். (03 காலப்பகுதியின் பின்னரும் கூட புலம்பெயர் ஊழியர் ஒருவர் இந் நன்மையைப் பெறுவதற்கு உரித்துடையவர் ஆவார்.) | ஆகக் கூடியது ரூ. 200,000 மற்றும் விமான டிக்கடின் உண்மை பெறுமதி, (உச்சம்) ரூ. 50,000 (இலங்கைக்கு திரும்பி வந்ததன் பின்னர் மேற்கொள்ளும் மருத்துவச் செலவினம்) |
| ஒப்பந்த காலப்பகுதியினுள் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது ஏற்படுகின்ற திடீர் விபத்தொன்றின் காரணமாக பகுதியளவிலான அங்கவீன நிலையை அடைதல். (03 காலப்பகுதியின் பின்னரும் கூட புலம்பெயர் ஊழியர் ஒருவர் இந் நன்மையைப் பெறுவதற்கு உரித்துடையவர் ஆவார்.) | ஆகக் கூடியது ரூ. 100,000 மற்றும் விமான டிக்கடின் உண்மை பெறுமதி, (உச்சம்) ரூ. 50,000 (இலங்கைக்கு திரும்பி வந்ததன் பின்னர் மேற்கொள்ளும் மருத்துவச் செலவினம்) |
| **குடும்ப அங்கத்தவர்கள்** | **நன்மைகள்** |
| குடும்ப அங்கத்தவர்களுக்கான காப்புறுதி – மருத்துவ செலவினம், மரணம் ஒன்றின்போது ஏற்படும் செலவினம் - விவாகமானவராயின் வாழ்க்கைத் துணை, விவாகமாகாத 18 வயதிற்கு குறைந்த தொழில் புரியாத பிள்ளைகள், விவாகமாகாதவராயின் பெற்றோர் | நாளொன்றுக்கு ரூ. 150 வீதம் (கட்டணம் செலுத்தாத வார்ட் ஒன்றில் சிகிச்சை பெறுவதற்காக) குடும்ப அலகு ஒன்றிற்கு ரூ. 25,000 (வருடம் ஒன்றிற்கு இரு தடைவ மாத்திரம்) |

தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திடம் காப்புறுதி ஒன்றினை பெற்றுக்கொண்டதன் பின்னர் வெளிநாட்டிலே தொழில் புரிவதற்காக செல்லுகின்ற 18 வயது முதல் 65 வயது வரையிலான இலங்கையர்கள் இக்காப்புறுதி சான்றிதழின் மூலம் நன்மை பெறுவர். இரண்டு வருட ஒப்பந்த காலத்திற்கான தவணைக் கட்டணம் ரூ. 800+ வரி மற்றும் 3 வருட காலப்பகுதிக்கு 850+ வரி

வெளிநாட்டு வேலை வாய்ப்பு காப்புறுதித் திட்டத்தின் 2010 ஆம் ஆண்டிற்கான மாதாந்த உரிமை கோரல்கள் மற்றும் இலாப பகுப்பாய்வு பின்வருமாறு

வரைபடம் - 5.17: வெளிநாட்டு, வேலைவாய்ப்புக் காப்புறுதி இலாபம்,கட்டுப்பணம், உரிமைக் கோரிக்கை






# *6. நிலைபெறத்தக்க அறிக்கையிடல்*

செழிப்பான அபிவிருத்தி நோக்கை அடைவதற்காக ஒருங்கமைக்கப்பட்ட செயலாற்றுகையை அளவிடல், அதன் உள்ளக மற்றும் வெளி தரப்பினர்களுக்கு பொறுப்பினை ஒப்படைப்பது சிறந்த அறிக்கையிடலின் நோக்கமாகும். நிறுவனமொன்றின் சமூக, சூழலியல், கலாசார மற்றும் பொருளாதார செயலாற்றுகை மற்றும் அதன் தாக்கம் என்பவற்றினை விருத்தி செய்துகொள்வதற்கான அடிப்படை வழிமுறைகளை விளக்குவதே சிறந்த அறிக்கையிடலின் நோக்கமாகும். செழிப்புத் தன்மையானது ஆகக் குறைந்த மட்டத்திலிருந்து பிரதான மட்டம் வரை மாற்றமடைந்துள்ளது.

மரபு ரீதியான தன்மை; மரபு ரீதியான தன்மையானது பொருளாதார ஏற்றத் தாழ்வு சமூக மற்றும் சூழலியல் அளவைகள் பற்றி கவனம் செலுத்துகின்றது. இதன்போது தமது தேசிய மற்றும் இணைந்த நற்தன்மைக்கான அச்சுறுத்தல்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படுவதுடன் அது பற்றி அரசாங்கத்தின் கவனமும் திசை திருப்பப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் ஒழுங்குபடுத்தல் நோக்கம் காரணமாக மட்டுமன்றி அதன் செழிப்புத் தன்மைக்கு காணப்படுகின்ற அச்சுறுத்தல்கள் தொடர்பாகவும் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. எனவே இவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவாறு தொழில்முயற்சிகள் கவனம் செலுத்துதல் வேண்டும். எமது இந்த அறிக்கை மூலம் அவ்வாறான தன்மைகளுக்கான உபாயங்கள் மற்றும் முகாமைத்துவ கட்டுப்பாடுகளை பயன்படுத்தக்கூடிய முறைகள் பற்றி கவனம் செலுத்துவதற்கான பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

2011 இல் காப்புறுதிக் கைத்தொழில் கவனம் செலுத்துவதனால் தொழில் முயற்சிகளின் நிறுவனசார் நற்தன்மை பக்கம் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. அதற்கேற்ப தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் பொருளாதார சமூக மற்றும் சூழலியல் செயற்பாடுகளின் நற்தன்மையின் உண்மையான நிலை பற்றிய புதிய செயலாற்றுகை அளவீடு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனூடாக நிறுவனமானது மிகவும் சிறந்த ஒரு அமைப்பாக மாறுவதற்கு எத்தனிக்கின்றது.

எமது தொழில்முயற்சி நோக்கங்களுக்கு அப்பால் சென்று சமூக நலன் கருதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தேசத்தை கட்டியெழுப்புவதற்கும் பங்களிப்பு செலுத்தி வருகின்றோம். நாம் துரிதமாக கட்டியெழுப்புகின்ற உறவுகள் மற்றும் நாம் தொழிலில் ஈடுபடும் முறை என்பவற்றின் எண்ணக்கருவைச் சுற்றி வளம் வருகின்ற எமது பங்குதாரர்களை கட்டியெழுப்புவதற்கும் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் மற்றும் அவர்களை வலுவூட்டுவதற்கும் ஒத்துழைப்பதே தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நோக்கமாகும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் சூழலில் அழிக்கப்படுவதை தடுக்கும் அல்லது ஆற்றல் நுகர்வு, கழிவு, பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு குறைப்பு, பொறுப்பு

முதலாளி ஒருவர் இருப்பது நன்கு மேம்படுத்த குறைப்பு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமாக பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் போது சமூக நிலைமைகள் மோசமாகி நோக்கம் ஒரு நிலையான வர்த்தக அமைப்பு ஏற்றுக் கொள்வதாக என்ற ஊழியர்கள், வழங்குநர்கள் ஒரு நியாயமான விலை செலுத்தி, தங்கள் தொழில் வளர்ச்சி அதிகரிக்க ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்க, வழங்குநர்களிடமிருந்து நிலையான மற்றும் உபகரணங்கள் போன்ற ஆதார உள்ளீடுகளானது அத்தகைய குளிரூட்டிகள் மற்றும் பிற மின் நுகரும் உபகரணங்கள் பயன்பாடு கட்டுப்படுத்தும் என பல்வேறு வகையிலும் கார்பன் வெளியேற்ற குறைப்பு என்பவற்றை இயக்குகின்றன.

### நன்மையடைவோர் குழு 1 – அரசாங்கம்

தமது பாரம்பரிய முறைமையின் பிரகாரம் சென்று தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் 2011 ஆம் ஆண்டிலே திரண்ட நிதியத்திற்கு 3,495 மில்லியன் ருபா பங்களிப்பினை பெற்றுக் கொடுத்துள்ளது.தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியமானது 2010 இல் ரூபா. 2,000 மில்லியன்களையும், 2009 இல் ரூபா. 2,250 மில்லியன்களையும், மற்றும் 2008 இல் ரூபா. 1,000 மில்லியன்களையும் பங்களிப்பு செய்துள்ளன.

<u>அட்டவணை – 6.01: திரண்ட நிதியத்திற்கான பங்களிப்பு</u>

| வருடம் | ரூபா. மில்லியன் |
|---|---|
| 2006 | 4,000 |
| 2007 | - |
| 2008 | 1,000 |
| 2009 | 2,250 |
| 2010 | 2,000 |
| 2011 | 3,495 |
| | |

<u>வரைபடம் –6.01: நாட்டின் வளர்ச்சிக்கு தே.கா.ந.பொ. நிதியத்தின் பங்களிப்பு</u>




### நன்மையடைவோர் குழு 2 – நுகர்வோர்

வங்குரோத்து நிலை அல்லது கடன் மீதான நம்பிக்கையற்ற தன்மையினை குறைப்பதன் மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் தன்மையினை உயர்த்தி வாடிக்கையாளர்களுக்கு மிகவும் சிறந்த சேவையொன்றினை வழங்கும் பொருட்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட மக்கள் சேவைக்காக காப்புறுதி வரலாற்றிலே நி-

றுவனமொன்று பெற்றுக் கொண்ட நிதிசார் விருதான RAM மற்றும் AAA தரம் என்பன தொடர்ச்சியாக பேணி வரப்பட்டுள்ளன.




மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரியும் இலங்கை பணிப்பெண்களின் நலன்கருதி வெளிநாட்டு காப்புறுதி திட்டத்தின் கீழ் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் காப்புறுதி நன்மைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் பாதிக்கப்பட்ட சிலருக்கு இந்நிதியத்தினால் கருணை கொடுப்பனவும் செலுத்தப்பட்டுள்ளன.

2011 ஆண்டிலே தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியமானது தமது ஐந்தாவது ஆண்டு பூர்த்தியினை மிகவும் அபிமானத்துடன் கொண்டாடியது. அத்துடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியமானது தமது ஐந்தாண்டு பூர்த்தியை முன்னிட்டு விரைவில் காப்புறுதி நன்மைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அக்ரஹார இலத்திரனியல் காப்புறுதி அட்டை ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.



ஒவ்வொரு அரசாங்க உத்தியோகத்தருக்கும் இலத்திரனியல் அட்டையை பெற்றுக் கொடுக்கும் முகமாக கருத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் அக்ரஹார அங்கத்துவம் பெற்றவர்களுக்கு தரவு முறைமையொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் மருத்துவமனைகளில் மிகவும் வசதியான முறையில் சேவையினை பெற்றுக் கொள்வதற்கு அங்கத்தவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.



**நன்மையடைவோர் குழு 3 - சமூகம்**

புத்தள பிரதேசத்தில் நடாத்தப்பட்ட 2011 தேசத்திற்கு மகுடம் கண்காட்சி காலப்பகுதியினுள் இலவச மூக்கு கண்ணாடி வழங்குதல் மற்றும் அன்பளிப்பு செய்தல் செயற்திட்டமொன்று தேசிய காப்புறுதி

நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் 2011 தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை முன்னிட்டு தனியார் திடீர் விபத்து காப்புறுதி ஒன்றும் வழங்கப்பட்டது.

மேலும் இதன் மூலம் தபகல்ல மருத்துவமனையை நவீனமயப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டதுடன் மருத்துவ உபகரணங்கள், படுக்கைகள், சக்கர நாட்காழி என்பனவும் அன்பளிப்பு செய்யப்பட்டன.



நாட்டுக்கு செய்யப்பட்ட சேவையினை கௌரவிக்கும் வகையில் எமது நாட்டுத் தலைவரான அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் தாய்நாட்டை பாதுகாப்பதற்கு உயிர்த்தியாகம் செய்த இராணுவ வீரர்களுக்கும் ஆசி வேண்டி இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இரண்டாவது முறையாகவும் புதிய அலுவலகத்திலே இரத்த தான நிகழ்வொன்று நடத்தப்பட்டது.





**நன்மையடைவோர் குழு 4 – ஊழியர்கள்**

காப்புறுதி வாடிக்கையாளர்களை தக்க வைத்துக்கொள்ளும் ஒருங்கிணைப்பினை கட்டியெழுப்புவதற்காக தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் முக்கிய காரணியாக மனித வள சாத்திய வளம் இனங் காணப்பட்டுள்ளது. அதன் காரணமாக பதவியணிக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றினை ஒழுங்கு செய்து அதன் சாத்திய வளங்களை அதிகரித்துக் கொள்வதற்காக முதலீட்டு பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

<u>அட்டவணை – 6.02: பணியாட்தொகுதி நலனோம்புகை</u>

**பணியாட்தொகுதி நலனோம்புகை முதலீடுகள் (ரூபா)**

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| நலனோம்புகை செலவு | 195,420 | 606,228 | 233,313 | 935,912 | 1,438,399 |
| .மரு. காப்புறுதி | 94600 | | | 120,825 | 176,017 |





குழு உணர்வு, பதவியணியின் ஒற்றுமை, என்வற்றினை விருத்தி செய்துகொள்வதற்காக ரோயல் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் 2011 ஏப்ரல் மாதத்திலே தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் வருடாந்த புத்தாண்டு விழா கொண்டாடப்பட்டது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டு நி-றுவப்பட்டது. தொடக்கம் முதல் தொடர்ந்து நலன்புரி சார்ந்த காப்பீட்டு திட்டங்களை வகுத்து செயற்பட்டதோடு இலங்கை சமூகத்தின் பல்வேறு பிரிவுக-ளில் பாதுகாக்க 2011 ஆம் ஆண்டிலே தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் செயல்பட ஆரம்பித்தது.

### i. அரச ஊழியர்களுக்கான மருத்துவ காப்புறுதித் திட்டம் (அக்ரஹார)

அரசாங்க உத்தியோகத்தர்களின் நலன் கருதி 1997 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அக்ரஹார மருத்துவக் காப்புறுதி முறை என்றழைக்கப்படும் மருத்துவக் காப்புறுதி முறை ஆரம்பத்தில் அல்லாத காப்புறுதி முறைெ-யான்றாகவே காணப்பட்டது. அவ்வாறாயினும் 2005 ஆம் ஆண்டிலே அரசாங்கத்தினால் பின்னர் எடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்றின் பிரகாரம் இக்காப்புறுதி முறைக்காக அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்ளிடமும் மாதாந்த சம்பளத்திலிருந்து ரூ. 75.00 தொகை காப்புறுதித் தவணையாக அறவிடப்பட்டது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனியார் மயப்படுத்தப்படும் வரையில் இக்காப்புறுதி முறை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் அமுல்படுத்தப்பட்டது. அது தனியார் மயப்படுத்தப்பட்டதன் பின்னர் 2006 சனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமாறு அரசாங்கத்தினால் இக்காப்புறுதி முறை பொறுப்பேற்கப்பட்டதுடன், அது தனியான காப்புறுதி முறைெ-யான்றாக தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### ii. வேலை நிறுத்தம், கலவரம், சிவில் வன்முறைகள் மற்றும் பயங்கரவாத நிதியத்தின் முகாமைத்துவம் (SRCC & TF)

வேலை நிறுத்தம், கலவரம், சிவில் வன்முறைகள் மற்றும் பயங்கரவாத நிதியம் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 1987 ஆம் ஆண்டிலே தாபிக்கப்பட்டது. அமைச்சரவையானது அனுமதிப்பத்திரதார காப்புறுதி அமைப்பாகக் காணப்படும் இந்நிதியத்தின் அனைத்து உறுப்பினர்களாலும் வெளியிடப்பட்ட இலங்கையின் பூகோள எல்லையினுள் வேலை

நிறுத்தம், கலவரம், சிவில் வன்முறைகள் மற்றும் பயங்கரவாத செயற்பாடுகள் காரணமாக ஏற்படுகின்ற சொத்து அழிவுகள்/ சேதங்கள் மற்றும்/அல்லது தனியார் சுகாதார பிரச்சினைகள், திடீர் விடத்துக்கள், உடல்சார் காயங்கள் என்பவற்றினை உள்ளடக்கியவாறான மேலதிக காப்புறுதிப் பத்திரம் ஒன்றினை வழங்கும் நோக்கிலாகும்.

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் இணை நி-றுவனமாகக் காணப்பட்ட வரையறுக்கப்பட்ட ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பொறுப்பேற்று 2005.08.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமாறு இந்நிதியம் நிதி, திட்டமிடல் அமைச்சினால் நிருவகிக்கப்பட்டு வந்தது. இதன் பயனாக தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் கூட்டிணைப்பு காரணமாக வேலை நிறுத்தம், கலவரம், சிவில், வன்முறைகள் மற்றும் பயங்கரவாத நிதிய பணங்கள் அனைத்தும் தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

இறுதியில், இந்த பணம் தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தால் பராமரிக்கப்பட்டு சிறப்பு கணக்கு ஒன்றுக்கு மாற்றப்பட்டது.

### iii. பாராளுமன்ற உறுப்பினர்களின் காப்புறுதி முறை

தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தினால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு காப்புறுதி முறையொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இம்முறைமையின் கீழ் 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்மை கிட்டும். இதன் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பின்வரும் நன்மைகள் கிடைக்கப் பெறும்.

1. திடீர் விபத்துக் காப்புறுதி

திடீர் விபத்தொன்றின் மூலம் மரணித்தல்
ரூ. 5,000,000.00

திடீர் விபத்தொன்றின் மூலம் முழுமையாக அங்கவீனமடைதல்
ரூ. 5,000,000.00

2. வருடம் ஒன்றிற்கான மருத்துவக் காப்புறுதி ரூ. 200,000.00

### iv. இலங்கைக் காப்புறுதிக் கைத்தொழிலுக்கு மீள்க்காப்புறுதி அளித்தல்

தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தினால் இலங்கையினுள் மீள்க்காப்புறுதி அளிக்கும் திட்டம்

ஆரம்பிக்கப்பட்டது. தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் நடவடிக்கை முறைகளின் பிரகாரம், இலங்கையின் அனைத்து காப்புறுதிக் கம்பனிகளாலும் தமது மீள்காப்புறுதி 50% வரையில் தேசிய காப்புறுதிப் பொறுப்பு நிதியத்தில் பெற்றுக்கொள்ள வேண்டியது கட்டாயமானதாகும். 2011 ஆம் ஆண்டிலே தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தினால் இலங்கையின் காப்புறுதிக் கம்பனிகளின் மீள்காப்புறுதிப் பத்திரங்களின் 20% மீள்காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.

**v. மோட்டார் வாகன காப்புறுதித்திட்டம் (அரசாங்கத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களுக்கு)**

அழிவுக்கு உள்ளாவதற்கான தன்மை அல்லது சேதத்திற்கு உள்ளாதல் தொடர்பாக அனைத்து அரசாங்க மோட்டார் வாகனங்களும் காப்புறுதி செய்யப்படுவதில்லை. (சில நி-றுவனங்கள் மாத்திரம் காப்புறுதி செய்துகொள்கின்றன.) மூன்றாம் தரப்பினருக்கு யாதேனுமொரு நட்டம் ஏற்படும் பட்சத்தில் நட்டஈடு கோருவதற்கு மிகவும் கஸ்டமான கால தாமதமான பௌதீக செயற்பாட்டின் ஊடாகவே மேற்கொள்ளப்படகின்றது. அதனால், தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் ஆரம்பத்தில் அரச துறைக்கும் அதன் பின்னர் சுமையற்ற தவணை ஒன்றின் மீது தனியார் துறைக்கும் மோட்டார் வாகன காப்புறுதியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததுடன், இது தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற துரித வேகத்தில் விருத்தியடைந்து வருகின்ற துறையொன்றாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பூரண மோட்டார் வாகன காப்புறுதியின் மூலம் தீயபாயம், கொள்ளையடித்தல் மூலம் எற்படக் கூடிய சேதங்கள், மூன்றாம் தரப்பினருக்கான சேதங்கள், வெள்ளம், வேலை நிறுத்தம், சிவில் வன்முறைகள், கலவரம் மற்றும் பயங்கரவாதம் உள்ளிட்ட மேலதிக காப்புறுதி மற்றும் மூன்றாம் தரப்பின் சொத்துக்களுக்கான காப்புறுதி என்பன உள்ளடக்கப்படுகின்றன.

**vi. "வெளிநாட்டு வேலை வாய்ப்பு" வெளிநாடு சென்று தொழில்புரிவோருக்கான காப்புறுதித் திட்டம்**

இலங்கையைச் சேர்ந்த வெளிநாடுகளில் தொழில் புரியும் ஊழியர்களுக்காக இவ்வெளிநாட்டு தொழில்வாய்ப்பு

காப்புறுதித் திட்டத்தின் மூலம் தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் காப்புறுதியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்காக இலங்கையில் இருந்து புறப்பட்டுச் செல்கின்ற 16 – 65 வயதிற்கு இடைப்பட்ட இலங்கையர்கள் காப்புறுதிக்கு உட்படுத்தப்படுகின்றனர். தற்போது இக்காப்புறுதித் திட்டம் செயற்படுவதில்லை.

### vii. பொது காப்புறுதி முறை

இலக்கம் 1615/20 உடைய 2009.08.20 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இக்காப்புறுதித் திட்டம் தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது.இப்பொது காப்புறுதித் திட்டத்தின் கீழ் தீய-பாயக் காப்புறுதிச் சான்றிதழ், கடலபாயக் காப்புறுதிச் சான்றிதழ், ஊழியர் நட்டஈட்டு காப்புறுதிச் சான்றிதழ் என்பன வழங்கப்படுகின்றன.




## 7. ஆளுகை அறிக்கையிடல் -

## நிறுவன ஆளுகை

## அறிமுகம்

ஓர் அமைப்பின் கூட்டுரிமை ஆளுகை மற்றும் வணிக ஆளுகை ஆகியவற்றை உள்ளடக்கியதொரு வரைவுச் சட்டமாக தொழில் முயற்சி ஆளுமை திகழ்கிறது. செயலாற்றுகை முகாமைத்துவத்துடன் உக்தி ரீதியான தொடர்புகளையுடைய அதிசிறந்த கூட்டுரிமை ஆளுகைகளை அடைவதன் ஊடாக தமது வணிகச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லக்கூடிய பிரதான அம்சங்கள் தொடர்பில் கம்பனிகள் அவதானத்தைச் செலுத்துவதற்கு வாய்ப்பளிக்கிறது. இது ஒரு சவாலாகவும் அதேவேளையில் ஒரு வாய்ப்பாகவும் காணப்படுகிறது.

தொழில் முயற்சி ஆளுகையானது ஒரு அமைப்பின் முழுமையான பொறுப்புக் கூறல்களை உள்ளடக்கியிருப்பதுடன் கூட்டுரிமை ஆளுகை மற்றும் வணிக ஆளுகை ஆகியவை தொடர்பில் சமகாலத்தில் கவனத்தைச் செலுத்துவதுடன் பொறுப்புக் கூறல் மற்றும் இணங்கிச் செல்லுதல் ஆகியவற்றுக்கிடையிலான சமநிலை தொடர்பில் அக்கறைகளைக் கோருவதுடன் ஆக்கபூர்வமான விடயங்கள் மற்றும் வளப் பயன்பாடு ஆகியவற்றையும் மதிக்கிறது. ஓர் அமைப்பை முன்னெடுத்துச் செல்லக்கூடிய மற்றும் முறையான போதியளவு கட்டுப்பாடுகளைக் கொண்ட விடயங்களைப் பேணுவதுடன் மற்றும் இணங்கிச் செல்லக்கூடிய ஏற்பாடுகளைப் பேணுவதுடன் அவதானங்களை மேம்படுத்தக் கூடிய ஒருங்கிணைந்த வரைவுச் சட்டங்களையும் இது வழங்குகிறது.

சபைக் கட்டமைப்புகள் மற்றும் வகிபாகங்கள், நிறைவேற்றுப் படிகள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இணங்கிச்செல்லல் காணப்படுகிறது. அதேவேளை, செயலாற்றுகை பரிமாணமானது, உபாயம் மற்றும் பெறுமதி தோற்றம் போன்றன தொடர்பில் கவனம் செலுத்துகிறது. சபையானது உக்தி சார்ந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கும், இடர் தொடர்பான உள்ளார்ந்த விடயங்களைப் புரிந்து கொள்வதற்கும் செயலாற்றுகை தொடர்பான பிரதான அம்சங்களை அறிந்து கொள்வதற்கும் தீர்மானம் மேற்கொள்ளல் தொடர்பில் பிரதான கொள்கைகளை அடையாளம் காணபதற்கும் சபைக்கு இது உதவுகிறது.

பாரியளவில் பங்கீட்டுப்பாட்டாளர் பெறுமானங்களை வினைத்திறன் மிக்க முறையில் காத்திரமாக சிக்கனத்துடன் அடையும் பொருட்டு தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது பின்வரும் பிரதான தொழில் முயற்சி ஆளுகை சார் அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

அளவிடும் தன்மை – மாறுகின்ற தேவைகளுக்குப் பதிலளிக்கக்கூடிய

விதத்தில் காத்திரமிக்க முறையில் துல்லியமாக அளவிடும் ஆற்றல்.

*இசைவாக்கமடைதல் - மாறுகின்ற தேவைகளுக்கேற்ப துரிதமாகப் பதிலளித்தல்.

*நெகிழ்ச்சித் தன்மை - மாறுகின்ற தேவைகளுக்குப் நெகிழ்ச்சித் தன்மையுடன் செயற்படும் ஆற்றல்.

*இடை இயங்கல் - இணைப்பற்ற முறையிலும் இயங்கும் ஆற்றல்.

*முயற்சியாண்மை – வாய்ப்புகளுக்கேற்ற விதத்தில் துரிதமாக பதில் அளிக்கும் ஆற்றல்.

*கண்டுபிடிக்கக் கூடிய தன்மை – தனித்துவமிக்க முறையில் அடையாளம் காண்பதற்கேற்ற விதத்தில் கால வரண்முறைப்படி இடைத்தொடர்புகளை புலப்படுத்தும் ஆற்றல்.

*உச்சப்பயன் - செயல்முறைகளின் வினைத்திறனை தொடர்ச்சியாக மேம்படுத்தும் ஆற்றல்.

*பதிலளித்தல் - மேற்படி விடயங்கள் தொடர்பில் அழுத்தம் மிக்க சூழலில் அல்லது குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பதிலளிக்கும் ஆற்றல்.

கூட்டுரிமை ஆளுகையானது விதிகள், செயல்முறைகள் அல்லது வியாபாரம் இயங்குகின்ற ஒழுங்குபடுத்தப்படுகின்ற அல்லது கட்டுப்படுத்தப்படுகின்ற சட்டங்கள் தொடர்பில் பரந்த விளக்கத்தை அளிக்கிறது. மேலும் அதிகாரிகள் பங்கீட்டுப்பாட்டாளர்கள் அல்லது கூட்டுத்தாபனத்தின் யாப்பு மற்றும் நுகர்வோர் குழுக்கள், வாடிக்கையாளர்கள், அரசாங்க ஒழுங்கு விதிகள் போன்ற வெளிநிலைக் காரணிகள் தொடர்பான விளக்கங்களை உள்ளடக்கியதாகவும் கூட்டுரிமை ஆளுகை காணப்படுகிறது.

ஒரு காத்திரமான கட்டுப்பாட்டுடன் கூடிய சுற்றாடலுக்கு அதன் வெற்றிக்கு உறுதியான கூட்டுரிமை ஆளுகையின் அவசியத்தின் முக்கியத்துவத்தை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் உணர்ந்துள்ளது. இது இறுதியாக செயற்படுத்தலை வினைத்திறன் மிக்க முறையிலும் காத்திரமாகவும் சிக்கனமாகவும் மேம்படுத்துவதுடன் விளம்பரச் சின்னத்தின் நற்பெயரையும் மேலோங்கச் செய்கிறது. மேலும் பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவதுடன், ஒழுக்கம், வெளிப்படைத்தன்மை, சுதந்திரம், வகைப்பொறுப்புக் கூறல், பொறுப்புக் கூறல், நேர்மை, சமூகப் பொறுப்பு போன்ற முக்கிய கூட்டுரிமை ஆளுகை அம்சங்களை உருவாக்குவதற்கும் வழிவகுக்கிறது.

2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சட்டத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்

ஸ்தாபிக்கப்பட்டது முதல் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினாலும் பொது தொழில் முயற்சி வழிகாட்டிகள் ஊடாகவும் கூறப்பட்ட சிறந்த ஆளுகை மற்றும் கூட்டுரிமை ஆளுகை நடைமுறைகள் ஆகியவற்றுக்கேற்ப அதன் கூட்டுரிமை ஆளுகை நடைமுறைகள் உரிய பரிசீலனை களுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### நிதி மற்றும் காப்புறுதி மதிக்கூர்மை

2011 ஆம் ஆண்டில் முகாமைத்துவச் சபையின் நிதி மற்றும் காப்புறுதி மதிக்கூர்மை பணிப்பாளர் சபையினாலும் தவிசாளரினாலும் சிறப்பான முறையில் பலப்படுத்தப்படுகின்றது.

### தே.கா.ந.பொ.நி. சபை

நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் எட்டு உறுப்பினர்கள் அடங்கிய சபை ஒன்றினால் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் முகாமை செய்யப்படுகிறது. நிதி அமைச்சின் ஒரு பிரதிநிதியும், சுகாதார அமைச்சின் ஒரு பிரதி நிதியும், பொது நிருவாக அமைச்சின் ஒரு பிரதிநிதி யும் இலங்கை காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்புச் சபை யின் பணிப்பாளர் அதிபதியும் நிதி, வங்கி, காப்புறுதி, முகாமைத்துவம், சட்டம் ஆகிய துறைகளைச் சார்ந்த நிபுணர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சரினால் பெயர் குறிக்கப்படும் வேறு ஆட்கள் மூவரும் குறித்த முகாமைத்துவச் சபையில் அங்கம் வகிப்பர். ஒரு பிரதிநிதியை அதன் தவிசாளராக நியமிக்கும் தத்துவம் அமைச்சருக்கு உண்டு. இவ்வாறு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து சபையின் சகல உறுப்பினர்களும் 05 ஆண்டு காலத்திற்குப் பதவி வகிக்க வேண்டும். தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபை என்ற தலைப்பின் கீழ் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

### தகவல்களை வழங்குதல்

செயலாற்றுகை குறித்த மாதாந்த அறிக்கைகளும் கடந்த சபைக் கூட்ட அறிக்கைகளும் ஏனைய ஆவணங்களும் சபைக் கூட்டங்கள் இடம்பெறுவதற்கு ஒரு வார காலத்திற்கு முன்னரே அறிந்துகொள்வதற்காக பணிப்பாளர் சபைக்கு விநியோகிக்கப்படும்.

உபாயமுறைத் தீர்மானங்களுக்கு வரும்பொருட்டு தவிசாளர் உள்ளிட்ட சபை மாதாந்தம் கூடுகிறது. 2010 ஆம் ஆண்டில் 9 முறைகள் சபை கூடியுள்ளது. மேலும் 2010ஆம் ஆண்டுக் காலப்பகுதியினுள் 4 கணக்காய்வுக்குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.

### உள்ளகக் கட்டுப்பாடு

2011 ஆம் ஆண்டில் பிரிவுகளின் உள்ளகக் கணக்காய்வு, வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியம் உள்ளிட்ட உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டன.

### கணக்காய்வுக் குழு

2011 ஆம் ஆண்டில் கணக்காய்வுக் குழு அமைக்கப்பட்டதுடன், அதன் நோக்கெல்லை வருமாறு:-

1. உள்ளகக் கணக்காய்வுப் பொறுப்புகளை நிர்ணயித்தலும் வருடாந்தக் கணக்காய்வுத் திட்டங்களின் மீளாய்வும்.
2. நிறுவனத்தின் சகல செயற்பாடுகளும், உள்ளக ஆளுகை முறைமையின் மீளாய்வும் மதிப்பீடும்
3. கிரய விளைவுப் பெருக்க செயலாற்றுகையை அடிக்கடி மீளாய்வு செய்தலும், விரயமாகும் செலவினங்கள் முதலியவற்றை இல்லாமல் செய்தலும்.
4. வெளிநிலை கணினிகளுடன் கூட்டிணைவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வெளிநிலை முகாமைத்துவக் கடிதங்களில் அடங்கியுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதலும்.
5. சட்டதிட்டங்கள், விதிகள், நியதிகள், சுற்றுநிருபங்களுக்கு இணங்க செயலாற்றப்படுவதை உறுதியாக தேடி அறிந்துகொள்ளல.
6. கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயலாற்றுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு நிதிக் கூற்றுகளை மீளாய்வு செய்தல்
7. மாற்றுத் தீர்வுகளாக நடவடிக்கை எடுப்பதை உறுதிசெய்யும் பொருட்டு உள்ளகக் கணக்காய்வு/வெளிநிலைக் கணக்காய்வு அறிக்கைகள், முகாமைத்துவக் கடிதங்களை மீளாய்வு செய்தல.
8. பொது தொழில்முயற்சிகள் பற்றிய குழுவின் விதப்புரைகளும் கட்டளைகளும் செயற்படுத்தப்படுவதை மீளாய்வு செய்தல்.

ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கும் பொருட்டு செயற்குழுவின் முடிவுகள் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்தல்.

## நிறுவன ஆளுகை இணங்கியொழுகுதல்

| | |
|---|---|
| நிறுவன ஆளுகை அடிப்படைகள் | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மூலமான இணங்கியொழுகுதல் மட்டம் |
| தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று | பிரதம நிறைவேற்று அலுவலரின் நடவடிக்கைகளை செயலாற்றுவதற்கு சபையானது தவிசாளருக்கு அங்கீகாரம் அளித்துள்ளது. |
| அலுவலர் பிரிவுப் பொறுப்புக்கள் | தவிசாளர் சபையினை தலைமை வகிக்கும் பொறுப்பினைக் கொண்டுள்ளார். குறிப்பாக அவர் :<br>• நிறுவன ஆளுகையின் உயர்தரத்திற்கு இணங்கும் வகையில் சபை மற்றும் அதன் குழுக்களின் செயற்றிறன்மிக்க தொழிற்பாட்டினை உறுதி செய்கின்றார்.<br>• அபிவிருத்தி உபாயங்களில் சிரேஷ்ட முகாமைத்துவத்துக்கு உதவியளிபப்பதுடன் பாரியளவில் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு உதவியளித்து ஆலோசனை வழங்குகின்றார். ஒவ்வொரு பிரிவினையும் தலைமை வகிப்பதற்கு திணைக்களத் தலைவர்கள் பொறுப்பாகவுள்ளதுடன் சபையினால் வழங்கப்பட்ட அதிகாரங்களினுள் முகாமை செய்கின்றனர். குறிப்பாக அவர்:<br>• சபைக்கான பரிந்துரைகளை ஆக்குவதற்கு உபாய முன்மொழிவுகளை உருவாக்குவதுடன் உடன்பட்ட உபாயங்கள் தொழில் பிரதிபளிக்கின்றன என்பதை உறுதி செய்கின்றார்.<br>• சபைக்காக சமர்ப்பிப்பதற்கு உடன்பட்ட உபாயங்களுக்கமைவாக வருடாந்த திட்டங்களை உருவாக்கி உதவியளிக்கின்றார்.<br>• நிறுவனம் தனது திட்டங்களை அடைந்து கொள்வதற்கு இயலளவைக் கொண்டுள்ளது மற்றும் வேண்டப்பட்ட வளங்களை கொண்டுள்ளது என்பதனை உறுதி செய்வதற்கு மனித வளங்களைத் திட்டமிடுகின்றார்.<br>• வளங்களை வினைத்திறன்மிக்கதாக ஒழுங்கமைப்பதனை உறுதிசெய்யும் பொருட்டு செயன்முறை மற்றும் முறைமைகளை உருவாக்கி கட்டமைப்பு ஒழுங்கமைப்புக்களை தாபிக்கின்றார்.<br>• உடன்பட்ட திட்டங்கள், உபாயங்கள் மற்றும் கொள்கைகளுக்கிணங்க தொழிற்பாட்டின் செயலாற்றுகைக்காக |

| | |
|---|---|
| | சபைக்கு பொறுப்புடையவராக விளங்குகின்றார்.<br>• செயலாற்றுகை விருத்தி, தொடர்புகள் மற்றும் மதிப்பீடுகள் உள்ளடங்கலாக நிறைவேற்று அணிக்கு தலைமை தாங்குகின்றார்.<br>• முதலீடுகள் மீதான வருமானத்தினை மேற்பார்வை செய்கின்றார். |
| கொள்வனவுக் குழுக்கள் | திணைக்கள மட்டத்தில் நிலையியற் கொள்வனவுக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. கொள்வனவுப் பெறுமதியினைப் பொறுத்து சிறு அல்லது பாரிய கொள்வனவுக் குழுக்கள் விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் நியமிக்கப்பட்டன. |
| கணக்காய்வு குழு | கணக்காய்வு குழு 3 நிறைவேற்றல்லாத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. கணக்காய்வு குழு அது பொறுப்பாகவுள்ள நிதி மற்றும் நிர்வாக விடயங்களில் இன்றியமையாத பங்கினை வகிக்கின்றது.<br><br>**கணக்காய்வுக் குழு**<br><br>2011இன் போது பின்வரும் கணக்காய்வு விடயப்பரப்பு நோக்குடன் கணக்காய்வு குழு தாபிக்கப்பட்டது.<br><br>1. உள்ளக கணக்காய்வு அலகின் பொறுப்புக்களை நிர்ணயித்தலும் வருடாந்த கணக்காய்வு திட்டங்களை மீளாய்தலும்.<br>2. நிறுவனத்தின் சகல செயற்பாடுகளுக்குமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்தலும் மதிப்பிடுதலும்.<br>3. செலவு வினைத்திறனுக்காக கிரமமான இடைவெளியில் செயலாற்றுகையினை மீளாய்தல் மற்றும் வீண் செலவீனங்களை இல்லாதொழித்தல்.<br>4. வெளிவாரி கணக்காய்வாளருடன் ஒருங்கிணைத்தல் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அல்லது வெளிவாரி கணக்காய்வாளரின் முகாமைத்துவ கடிதங்களைப் பின்பற்றுதல்<br>5. நியதிச்சட்டங்கள், ஒழுங்கு விதிகள், விதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் என்பவற்றுடன் இணங்குகின்றதா என்பதை உறுதி செய்தல்.<br>6. கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியொழுகுவதனை உறுதி செய்வதற்கு நிதியியல் கூற்றுக்களை மீளாய்தல்.<br>7. பரிகார நடவடிக்கைகளுக்காக உள்ளக கணக்காய்வு / வெளிவாரி கணக்காய்வு அறிக்கைகள், முகாமைத்துவ கடிதங்களை மீளாய்தல்<br>8. பொதுத் தொழில் முயற்சிகள் மீதான குழுவில் பரிந்துரைகள்/பணிப்புரைகளின் அமுலாக்கத்தினை மீளாய்தல்.<br>2011ஆம் ஆண்டில் போது கணக்காய்வுக் குழு 6 தடவைகள் கூடியது. சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றுடன் இணங்கியொழுகுதலை உறுதிசெய்தல், நிதியியல் அறிக்கைகள், வெளிவாரி கணக்காய்வு, |

| | |
|---|---|
| | இணங்கியொழுகுதல் மற்றும் வழக்காடல், இடர் முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாடு மற்றும் உள்ளக கணக்காய்வு என்பவறறின் மீது கவனம் செலுத்தி காப்புறுதித் திட்டங்களின் செயற்றிறன், முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பினை உறுதி செய்வதற்கு கணக்காய்வு குழு நடைமுறைகளை செயலாற்றியது. |
| சபைக் கூட்டங்கள் | 2011ஆம் ஆண்டின்போது 17 சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அத்துடன் சபை கூட்டங்களில் சிறந்த வரவினைப் பேணியது. சபைக் கூட்டங்களில் சபை உறுப்பினர்களின் வரவு பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது.<br><br>நியமன திகதி / சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை<br>திரு. எஸ்.டீ. அபேகுணசேகர — 2010.05.10 — 17<br>தவிசாளர்<br>வைத்தியர. எல். சமரவிக்ரம — 11.06.2010 — 17<br>சபை உறுப்பினர்<br>திரு. ஏ.கே. செனவிரத்ன — 08.07.2011 — 17<br>சபை உறுப்பினர்<br>திரு. என். குலசேகர — 18.07.2011 — 08<br>சபை உறுப்பினர்<br>திரு. ஜே. தடல்லகே — 23.06.2010 — 16<br>சபை உறுப்பினர்<br>திரு. டப்ளியு.எச். பியதாஸ — 10.07.2010 — 14<br>சபை உறுப்பினர்<br><br>சபையின் பிரதான செயற்பாடுகளையும் பொறுப்புகளையும் உள்ளடக்கியதான சம்பிரதாயபூர்வ நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே சபை கூட்டங்கள் நடைபெற்றன.<br><br>முகாமைத்துவத்திற்கான உபாயமுறை திசையில் செல்லக்கூடிய ஐந்து வருட நிறுவன திட்டத்தினை சபை மீளாய்வு செய்து அங்கீகரித்தது. |
| பொறுப்புக் கூறலும் | அனுமதிக்கப்பட்ட வியாபார திட்டம் மற்றும் நிதியியல் அல்லாத இலக்குகளை நிறுவனம் அடையப்பெறல் என்பவற்றை அடிப்படையாகக் |

| | |
|---|---|
| கணக்காய்வும் | கொண்டு பொருத்தமான விதமொன்றில் தொழில் நடாத்தப்படுகின்றது என்பவற்றினை உறுதி செய்யும் பொருட்டு நிறுவனத்தின் பங்கு தாரர்களுக்கு சபை பொறுப்புக் கூறத்தக்கதாகும். |
| நிதியியல் அறிக்கை | சபையானது இயைபுடைய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டவாறு அரசாங்கத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதனை உறுதி செய்கின்றது.<br><br>**ஆண்டறிக்கை 2011**<br><br>தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஆண்டறிக்கை 2011 அறிவிக்கப்பட்ட தீர்மானங்களை மேற்கொள்ளும் பொருட்டு 2011ஆம் ஆண்டின்போது தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் விவகாரங்களின் ஒட்டுமொத்த மதிப்பீடு ஒன்றினை வழங்கும் நோக்குடன் தயாரிக்கப்பட்டுள்ளது.<br><br>**நிதியியல் கூற்றுக்கள்**<br><br>தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய இயைபுடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கமைவாக அதன் நிதியியல் கூற்றுக்களை சமர்ப்பித்துள்ளது. |




# 8. ஆளுகை அறிக்கையிடல் - இடர் முகாமைத்துவம்

## அறிமுகம்

தொழில் முயற்சி இடர் முகாமைத்துவம் என்பது ஓர் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ தொடர் செயற்பாடாகும். இது ஓர் அமைப்பு எதிர்கொள்கின்ற சகலவிதமான இடர்களையும் அவ் அமைப்பிலுள்ள சகல திணைக்களங்களும் கூட்டாக ஒற்றுமையுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்துகிறது. உறுதியற்ற தன்மைகளை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்தல், இடர்களுக்கு பதிலளித்தல், அவ்விதமான நிலைமைகள் ஏற்படுகின்ற போது அவற்றைத் தணித்தல் போன்றன தொடர்பில் தொழில் முயற்சி இடர் முகாமைத்துவம் ஒரு வரைவுச் சட்டத்தினை வழங்குகிறது. ஏற்கனவே நடைமுறையிலிருந்த இடர் முகாமைத்துவச் செயற்பாடுகளைப் போலல்லாது தொழில்முயற்சி இடர் முகாமைத்துவ எண்ணக்கருவானது இடர்கள் தொடர்பான பகுப்பாய்வுகளானது ஒரு அமைப்பின் சகல பகுதிகளிலும் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்ற விடயத்தை புலப்படுத்துகிறது. தே.கா.ந.பொ. நிதியத்தின் தொழில் முயற்சி இடர் முகாமைத்துவத்தின் இலக்கானது, தொழில் முயற்சி இடரின் பிரதான அம்சங்களை நன்கு புரிந்து கொள்வதுடன் சிரேஷ்ட முகாமைத்துவம் விரும்புகின்ற அளவுக்கு மிகச் சிறப்பாக வினைத்திறனுடன் தொழில் முயற்சி இடர் தொடர்பான விடயங்களை முகாமைத்துவம் செய்வதாகும்.

காப்புறுதித் துறையில் அதகரித்து வருகின்ற போட்டிகளை மிக வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு தொழில் முயற்சி இடர் முகாமைத்துவம் ஒரு முக்கியமான அம்சம் என தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் கருகிறது. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தொழில் முயற்சி இடர் முகாமைத்துவ உபாயங்களானது, பிரதானமாக இடர் நட்டம் மற்றும் கூட்டுரிமை உபாயங்கள் ஆகியவற்றுக்கிடையிலான ஒருமைப்பாடு, தொடர்பு வளர்ச்சி, இடரின் பெறுபேறுகள், இடர் தொடர்பான பதிலளிப்புகளை மேம்படுத்துதல், செயற்பாட்டு நட்டங்களையும் இழப்புக்களையும் குறைத்தல், தொழில் முயற்சி படர்ந்த இடர்களை முகாமைத்துவம் செய்தல், வாய்ப்புகளை இனங்கண்டு அதன் அடிப்படையில் செயற்படல் வழங்களை வினைத்திறன் மிக்க முறையில் முகாமைத்துவம் செய்தல் ஆகியவற்றை பிரதானமாக இது உள்ளடக்கியுள்ளது.

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் உள்ளார்ந்த, வெளிநிலை மற்றும் இடர் முகாமைத்துவ சூழமைவில் செயற்பட்டு அதன் மூலம் அமைப்பின் நோக்கங்களை அடைவதற்கு தடையாக இருக்கின்ற பொருள் ரீதியான அச்சுறுத்தல்களை இனங்கண்டு, அவ்வித ஒவ்வொரு பொருள் ரீதியான இடரின் விளைவுகள் எவ்வாறு பரந்துள்ளன, அவற்றின் அளவை துல்லியமாக கணிப்பிடுவது உள்ளடங்கலாக இடரின் தன்மையை பகுப்பாய்வு செய்து, இடர்களை ஒருங்கிணைத்து, இடர்களை மதிப்பிட்டு, முன்னுரிமைப்படுத்தி, இடர் தொடர்பில் கவனமாக செயற்பட்டு வாய்ப்புகளை பயன்படுத்தி, இடர் சூழலை கணகாணித்து மீளாய்வு செய்து செய்றபடக்கூடிய விதத்தில் ஒரு காத்திரமான தொழில் முயற்சி இடர் முகாமைத்துவ உபாயத்தை ஒருங்கிணைத்துள்ளது.

போட்டித்தன்மை மிகுந்த காப்புறுதித் துறையிலே நிகழக் கூடிய நெகிழ்ச்சிப் போக்குகள், நெருக்கடியிலிருந்து துரிதமாக மீளும் ஆற்றல் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்குடன் நன்கு செயற்படல், முடிவுறுத்தல் மாற்றங்கள், பொறுமையுடன் செயற்படல் போன்ற பிரதான தொழில்

முயற்சி இடர் முகாமைத்துவ உபாயங்களை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தோற்றுவித்துள்ளது.




**இடர் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

தமது பொறுப்புகளின் ஓர் அங்கமாக முகாமைத்துவம் உபாயமுறைகளை நிச்சயிக்கும் பொறுப்பை பணிப்பாளர்கள் சபையிடமும் கணக்காய்வுக் குழுவிடமும் ஒப்படைத்துள்ளது. நட்ட ஆபத்து மற்றும் உள்வாரியான கட்டுப்பாட்டை கண்காணித்தலும் நிறுவனத்தின் உபாயமுறை குறித்து ஊழியர்களை அறிவுறுத்துவது தொடர்பான பொறுப்பும் நிச்சயிக்கும் பொறுப்பும் கணக்காய்வுக் குழுவிடம் காணப்படுகின்றன.

தாக்குதலின் அளவு (பின்விளைவுகள்) நிகழக்கூடியன தொடர்பான கணிப்பீடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இனம் காணப்பட்ட இடர்கள் முன்னுரிமைப்படுத்தப்படும்

## R01 - உபாய முறை சுற்றாடல் சார் இடர்

உபாயமுறை நோக்கங்களை எய்துவதை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் உபாய நோக்கம் மீது பாதிப்புச் செலுத்தக்கூடிய இலங்கையின் காப்புறுதித் துறையுடன் தொடர்புபட்ட அரசியல், தொழில்நுட்ப, சமூக-கலாசார/ பொருளாதார அபிவிருத்திகள் காப்புறுதித் துறையின் போட்டியாளர்-வாடிக்கையாளர் இயக்காற்றல்கள் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தினால் கவனமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

## R02 நன்மதிப்பு வர்த்தக இடர்

இது யாதேலும் ஒரு சம்பவம் அல்லது தன்மையின் மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நன்மதிப்பிற்கு அல்லது அதன் நற்பெயருக்கு பாதிப்பினை ஏற்படுத்துவதனை குறிக்கும். தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்துடன் தொடர்புடைய அனைத்து ஒழுங்கு விதிகள் மற்றும் சட்டதிட்டங்களுடன் இசையுறுவதன் மூலம் சிறந்த சேவைகளினூடாக நிதியத்தின் அனுமதியுடன் பொது மக்களுக்கு தகவல்களை வழங்கி மேற்படி சட்டதிட்டங்களுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் ஏற்ப செயற்படக்கூடியவாறு அனைத்து ஊழியர்களையும் ஒழுங்குமுறைப்படுத்தி தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நன்மதிப்பு இடரினை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## R03 - சர்வதேச இடர்

தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் வியாபார நடவடிக்கைகள் மீது நேரடியாகப் பாதிப்புச் செலுத்தியுள்ள சர்வதேச அரசியல் மற்றும் சமூக.'.பொருளாதார இயக்காற்றல்கள் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளன.

இலங்கையின் புலம்பெயர் ஊழியர்களில் பெரும்பாலானோர் வாழும் மத்திய கிழக்கு நாடுகளின் சார்புப் போக்குகள் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் மீள் காப்புறுதிப் பிரிவு சார்ந்த சர்வதேச வியாபார சார்புப் போக்குகளை முகாமைத்துவம் செய்வதும் குறிப்பாக கண்காணிப்பதும் அதில் அடங்கும்.

## R04 - அதேநேர இடர்

2011 இல், பேரழிவு நிகழ்வுகள் சாத்தியமான நிகழ்வு காரணமாக அதிகரித்த உரிமை கோரல் செலவுகளை இருந்து சுமையை குறைக்கும் வகையில், மறுகாப்பீட்டு ஒப்பந்தங்கள் அக்டோபர் 2011 இறுதி வரை நுழைந்தது.

## R05 கூட்டாண்மை வடிவ இடர்

கூட்டாண்மை வடிவ பிரதான இடராக அமைவது, காப்புறுதித் துறை சார்ந்த தொழிற் தகைமைமிக்க ஆளணியருக்கான தட்டுப்பாடாகும். இது இக்கைத்தொழிலுக்கும் மற்றும் பதவியணியிலிருந்து விலகிச் செல்வோரின் விகிதத்திற்கும் தாக்கம் செலுத்தியுள்ளது. தொடர்ச்சியாக கற்கை நெறிகளை வழங்கி சகல துறைகளிலிருந்தும் ஊழியர்களை மேம்படுத்தி அவர்களுக்கான

அனைத்து வசதிகளையும் பெற்றுக்கொடுத்து மனிதவள இடரை முகாமைத்துவம் செய்வதற்காக தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

### R06 மனித வள இடர்

மனிதவளப் பிரிவின் பிரதான இடராக அமைவது, காப்புறுதித் துறை சார்ந்த தொழிற் தகைமைமிக்க ஆளணியருக்கான தட்டுப்பாடாகும். இது இக்கைத்தொழிலுக்கும் மற்றும் பதவியணியிலிருந்து விலகிச் செல்வோரின் விகிதத்திற்கும் தாக்கம் செலுத்தியுள்ளது. தொடர்ச்சியாக கற்கை நெறிகளை வழங்கி சகல துறைகளிலிருந்தும் ஊழியர்களை மேம்படுத்தி அவர்களுக்கான அனைத்து வசதிகளையும் பெற்றுக்கொடுத்து மனிதவள இடரை முகாமைத்துவம் செய்வதற்காக தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

### R07 சந்தைப்படுத்தல்/வியாபார இடர்

வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத காப்புறுதி, மோட்டார் வாகனக் காப்புறுதி, அக்ரஹார காப்புறுதி, வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதி, மீன் காப்புறுதி முதலான அநேகமான உபாயமுறை வியாபாரப் பிரிவுகளுக்கு பல்வகைமையடைதன் ஊடாக நட்ட ஆபத்து குறைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

### R08 அந்நியச் செலாவணி ஏற்ற இறக்க இடர்

அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கலின்போது ஏற்படும் இடரை தவிர்த்துக் கொள்ளும் வகையில் மீன் காப்புறுதித் தவணை தொகையினை உள்ளூர் நிதியின் பெறுமதியில் மீள்காப்புறுதி ஒப்பந்தங்களை செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### R09 தகவல் உபாயமுறை, தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ சார் இடர்

காப்புறுதி கட்டுப்பண செயல்முறை, உரிமைக் கோரிக்கை செயல்முறை, கணக்கியல் செயல்முறை ஆகியன தொடர்பில் கணினி மென்பொருள்களை பயன்படுத்துவது நுகர்வோருக்கான சேவை-களை வழங்குவதில் ஒரு முக்கிய அம்சமாகும்.

தகவல் தொழில்நுட்ப நட்ட ஆபத்துகளை முறியடிக்க மாற்றுத் தீர்வுகளாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வைரஸ் தாக்கத்தைத் தடுக்கும் பொருட்டு தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதிய அலுவலகத்தின் கணினிகளில் Anti-virus பக்கேஜ் நிறுவப்பட்டுள்ளது. முறைமைகள் செயல் இழப்பதன் மூலம் ஏழக்கூடிய நட்டங்கள் Backup Storage Systems மற்றும் தொடர் வலு முறைமைகள் ஊடாக குறைக்கப்பட்டுள்ளன.

### R10 கடன் இடர்

முதலீட்டுக் கடன் இடரைக் குறைந்த மட்டத்தில் எளிதுபடுத்தும் பொருட்டு திறைசே-சரி உண்டியல்கள், REPOs, திறைசேரி முறிகளில் நட்ட ஆபத்துகள் அற்ற முதல-ீடுகள் அரச வங்கிகளில் மாத்திரம் செய்யப்படுகின்றன.

## R11 செயற்பாட்டு இடர்

செயற்பாடுகளை கணினிமயப்படுத்துவதன் ஊடாக செயற்பாட்டு நட்ட ஆபத்துகள் குறைக்கப்படுகின்றன. கட்டுப்பணங்களைத் திரட்டுதல், உரிமைக் கோரிக்கைக் கொடுப்பனவுகள் தொடர்பில் ஏற்படும் வழுக்களையும் முரண்பாடுகளையும் குறைத்துக் கொள்ளும் பொருட்டு வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியத்தினதும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினதும் ஏனைய பிரிவுகளின் உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், வழுக்களையும் முரண்பாடுகளையும் குறைத்துக்கொள்ளும் பொருட்டு அலுவலக செயற்பாட்டு அலுவல்கள் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளன.

## R12 கருத்திற்கொண்ட இடர்கள்

மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி உள்ளிட்ட அதிகமான வங்கிகளுக்கு முதலீட்டு பல்வகைப்படுத்தில் ஊடாக கருத்திற்கொண்ட இடரின் தன்மை குறைக்கப்பட்டுள்ளது.

## R13 திரவத்தன்மை இடர்

REPOS நானாவித வகையில் முறிவடையும் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி பிணைகள் போன்ற முதலீட்டு பல்வகைப்படுத்தல் முதலீடுகளின் மூலம் உரிமை கோரல்களை வழங்குவதற்கான மீள்காப்புறுதிக் கொடுப்பனவுகள் மற்றும் திறைசேரிக்கு நிதியினை மாற்றுதல் போன்ற ஒப்பந்த ரீதியான பொறுப்புக்களை பூர்த்தி செய்ய முடியாத தன்மையானது தளர்த்தப்பட்டுள்ளது.

## R14 உரிமை கோரிக்கை தீர்ப்பதற்கான இடர்

உரிமை கோரிக்கைகள் அதிகரிப்பதன் விளைவாக இடர் காரணிகள், திடீரென அதிகரிக்கும் வாய்ப்புள்ளன.

இழப்புச் சீர் செய்தல், உரிமைக் கோரிக்கைக் குழுக்கள் மூலமாக புலனாய்வு விசாரணைகள் ஆகியவற்றின் மூலம் நேர்மையற்ற உரிமைக் கோரிக்கைகளை தடுப்பதன் மூலம் உரிமைக் கோரிக்கை அதிகரிப்பு தொடர்பான இடர்களை தடுக்க முடியும்.




## 9. நிதிக் கூற்றுக்கள் - 2011

# வருமான மற்றும் செலவுக் கூற்று

## வருமான மற்றும் செலவுக் கூற்று

(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)

டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்புகள் | 2011 அக்ரஹாரவும் பிறவும் | 2011 வே.க.சி.கொ.ப.நி. | 2011 மொத்தம் | 2010 மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | | |
| தேறிய உழைக்கப்பட்ட கட்டுப்பண வருமானம் | 01 | 1,741,713,258 | 1,864,651,774 | **3,606,365,031** | 3,926,469,856 |
| **நன்மைகளும், இழப்புகளும், செலவுகளும்** | | | | | |
| காப்புறுதி உரிமைக் கோரிக்கைகளும் நன்மைகளும் | 02 | (1,717,209,789) | (162,276,907) | **(1,879,486,696)** | (2,292,072,983) |
| | | 24,503,468 | 1,702,374,867 | **1,726,878,335** | 1,634,396,873 |
| **பிற வருமானம்** | | | | - | - |
| முதலீட்டு வருமானம் | | 106,516,361 | 616,895,880 | **723,412,241** | 798,117,037 |
| கடன்கள் மீதான வட்டி | | - | 10,163,846 | **10,163,846** | 16,982,331 |
| பிற வருமானம் | | 555,784 | 187,830 | **743,614** | 1,006,353 |
| | | 107,072,145 | 627,247,556 | **734,319,701** | 816,105,721 |
| **செலவினம்** | | | | - | - |
| பணியாட்டொகுதியினருக்கான செலவுகள் | 03 | 54,748,938 | 1,251,916 | **56,000,854** | 43,873,415 |
| நிருவாகச் செலவுகள் | 04 | 60,373,264 | 8,542,286 | **68,915,550** | 43,588,622 |
| நிதி மற்றும் பிற செலவுகள் | 05 | 6,144,596 | 15,437,330 | **21,581,925** | 32,425,697 |
| **மொத்தச் செலவினம்** | | 121,266,798 | 25,231,532 | **146,498,329** | 119,887,735 |
| **செலவினத்துக்கு மேலான வருமானம்** | | 10,308,816 | 2,304,390,891 | **2,314,699,707** | 2,330,614,859 |

# ஐந்தொகை

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

ஐந்தொகை

(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)

திசெம்பர் 31 இலுள்ளவாறு

| | குறிப்புகள் | 2011 அக்ரஹாரவும் பிறவும் | 2011 வே.க.சி.கொ.ப.நி. | 2011 மொத்தம் | 2010 மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடப்புச் சொத்துக்கள் அல்லாதவை** | | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி உபகரணம் | 06 | 22,994,316 | 6,612,561 | 29,606,877 | 36,096,011 |
| முதலீடுகள் | | 1,260,159,657 | 3,184,386,606 | 4,444,546,262 | 5,574,107,464 |
| | | 1,283,153,973 | 3,190,999,167 | 4,474,153,140 | 5,610,203,475 |
| **நடப்புச் சொத்துக்கள்** | | | | | |
| பெறப்படற்பாலவை | 07 | 363,301,018 | 1,564,513,547 | 1,927,814,565 | 1,945,815,895 |
| காசும் காசுக்கு நிகரானவையும் | 08 | 285,279,676 | 3,257,690,270 | 3,542,969,945 | 3,594,104,553 |
| | | 648,580,693 | 4,822,203,817 | 5,470,784,510 | 5,539,920,448 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 1,931,734,666 | 8,013,202,983 | 9,944,937,649 | 11,150,123,923 |
| **உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | | | | |
| **உரிமை மூலதனம்** | | | | | |
| திரண்ட நிதியம் | 09 | 1,713,638,127 | 6,783,811,580 | 8,497,449,707 | 9,695,467,155 |
| | | 1,713,638,127 | 6,783,811,580 | 8,497,449,707 | 9,695,467,155 |
| **தொழிற்படு ஒதுக்கு** | | | | | |
| உழைக்கப்படாத கட்டுப்பணம் | 10 | - | 963,443,837 | 963,443,837 | 821,564,804 |
| மீற்போடப்பட்ட தொகை | 11 | - | (161,486,715) | (161,486,715) | (139,745,300) |
| | | - | 801,957,122 | 801,957,122 | 681,819,505 |
| **பொறுப்புகள்** | | | | | |
| **நடப்புப் பொறுப்புகள் அல்லாதவை** | | | | | |
| அரச கொடை | | 142,150 | - | 142,150 | 284,330 |
| செலுத்தப்படற்பாலதான இலாபத்தொகை | 12 | - | 12,287,375 | 12,287,375 | 12,287,375 |
